பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 20] சென்னை: ஆவணி 1 (17—8—72) விபாழன் வெளியூர்: ஆவணி 2 (18—8—72) வெள்ளி [இதழ்: 54

மரண வாயிலிருந்து தப்புவோர்

தமிழ் நாட்டில் 83 பேர்

சென்னை, ஆக. 17—

தமிழ்நாட்டில் மரண தண்டனை நிறைவேற்றப்படவிருக்கும் 83 கைதிகள் உயிர் பிழைப்பார்கள்.

விடுதலை நாள் வெள்ளி விழாவை முன்னிட்டு மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைப்பதென்று இந்திய அரசு செய்துள்ள முடிவின்படி,

(4-ம் பக்கம் பார்க்க)

இந்தியைத் திணிக்கும் முயற்சி

எதிர்த்துத் தலைமையமைச்சருக்குத் தமிழக அரசு கடிதம்

சட்டப் பேரவையில் முதல்வர் கலைஞர் தகவல்

தாமிரப் பட்டயத்தில் இந்தி திணிக்கப்பட்டதற்குக் கண்டனம்

சென்னை, ஆக. 17

"மத்திய அரசின் இந்தித் திணிப்பு நடவடிக்கைகட்கு எதிர்ப்புத் தெரிவித்துத் தமிழக அரசு தலைமையமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறது; அந்தக் கடிதத்துக்கு இதுவரையில் தலைமையமைச்சரிடமிருந்து பதில் வரவில்லை"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இன்று சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

"விடுதலைப் போராட்டத் தியாகிகட்கு வழங்கப்பட்ட செப்புப் பட்டயத்தில் (தாமிர பத்ரம்) இந்தி மட்டுமே இடம் பெற்றிருப்பது பொருத்தமற்ற செயல்" என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

கேள்வி நேரத்தின்போது, ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

"மத்திய அமைச்சர்களை இனிமேல் இந்தியில்தான் அழைக்க வேண்டும் என்று மத்திய அரசு ஆணை பிறப்பித்துள்ளதை இந்த அரசு அறியுமா? 'ஆம்' எனில், அதன்மீது மாநில அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை?"

என்று சட்டப் பேரவையில் கழக உறுப்பினர் துரை முருகன் கேட்டார்.

இக்கேள்விக்கு முதலமைச்சர் பதிலளிக்கையில் கூறியதாவது:—

"இந்திய அரசியல் அமைப்புச் சட்ட விதிகளுக்கும் -- இந்திய அரசின் ஆட்சி மொழிச் சட்டத்திற்கும் மண்டித நேரு அவர்கள் வழங்கிய உறுதி மொழிக்கும் முரணாக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், இவ்வுத்தரவைத் திரும்பப்பெற வேண்டுமென்றும் நமது மனக்குமுறலைத் தெரிவித்துத் தலைமையமைச்சருக்குக் கடிதம் எழுதியுள்ளோம்; ஆனால் இன்றுவரை அதற்குப் பதில் வரவில்லை."

துணைக் கேள்விகட்கும் பதிலளிக்கையில் முதலமைச்சர் தெரிவித்ததாவது:—

"இந்திய அரசு விடுதலைப் போராட்ட வீரர்கட்கு அளித்த தாமிரப் பத்திரத்தில் இந்தியில் மட்டும் எழுதப்பட்டிருப்பது நமது அதிருப்திக்கு உரியது தான்; மொத்தம் ஆயிரம் பேருக்குத்தான் இந்தத் தாமிரப் பட்டயம் வழங்கப்பட்டிருக்கிறது; அவரவரின் மொழியிலேயே பொறிக்கப்பட்டிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும்.

அமைச்சர்களின் பெயரை இந்தியில்தான் எழுத வேண்டும் என்பதை, பிறகு, 'ரோமன் லிபியில் எழுதலாம்' என்று நாடாளுமன்றத்தில் உடன்பாடு காணப்பட்டிருக்கிறது; ஆனால், நமக்கு நேரடியாக அங்கிருந்து பதில் ஒன்றும் வரவில்லை; அரசியல் சட்டத்தில், 'பிரைம் மினிஸ்டர்' என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர, 'பிரதான்' என்று இல்லை."

கார்டு வேலையில் 'டாக்டர்' பட்டதாரி

பம்பாய், ஆக. 17—

இந்திய இரயில்வேக்களில் பணியாற்றும் 18,000 கார்டுகளில் சுமார் 50 சதவிகிதம் பேர் பட்டதாரிகளாவர்; டாக்டர் (பி. எச்டி.) சட்டத்துறை எம். எல். பட்டதாரிகளும் உள்ளனர்.

அனைத்திந்திய கார்டுகள் சங்கத்தின் 12-வது ஆண்டு மாநாட்டில் டாக்டர் எல். எம். சிங்வி இத்தகவலைத் தெரிவித்தார்.

25 ஆண்டுக் காலச் சுதந்தர ஆட்சிக்குப் பிறகும் இந்த நிலையா?

தாழ்த்தப்பட்ட மக்கள் அடைந்த முன்னேற்றம் என்ன?

நாடாளுமன்ற மேலவையில் கழக உறுப்பினர் ஜி. ஏ. அப்பன் குமுறல்

புதுடில்லி, ஆக. 17—

தாழ்த்தப்பட்டவர்களை முன்னேற்றுவதில் போதிய கவனம் செலுத்தவில்லை என்று அரசை பல உறுப்பினர்களும் நேற்று நாடாளுமன்ற மேலவையில் குற்றஞ்சாட்டினர்.

இந்துக்களால் அரிசனங்களுக்கு உழைக்கப்படும் கொடுமைகளைத் தடுத்துநிறுத்த அரசு தவறிவிட்டதாக உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

கழக உறுப்பினர் ஜி. ஏ. அப்பன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மத்திய அமைச்சரவையில் காபினட் தகுதி பெற்ற தாழ்த்தப்பட்ட இன அமைச்சர் ஒருவர் மட்டுமே இருக்கிறார்; இணை அமைச்சர்களில் ஒருவர்கூட தாழ்த்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்தவர் இல்லை.

சுதந்தரம் பெற்று 25 ஆண்டுகள் ஆகியும் கிராமப்புறங்களில் இன்னமும் தீண்டாமை நீடித்துவருகிறது."

இடது கம்யூனிஸ்டு உறுப்பினர் சுப்பிரமணிய மேனன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மக்கட் தொகையில் ஐந்தில் ஒரு பங்குனர் இன்னமும் அடிப்படை மனித உரிமையையே பெறவில்லை. பல மாநிலங்களிலும் இன்னமும் அடிமை முறை இருந்துவருகிறது."

சைதன்ய பிரசாத் மாகி என்பவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தாழ்த்தப்பட்டவர்களில் 90 சதவிகிதம் பேர் வறுமை மட்டத்துக்கும் கீழுள்ள நிலையில் இப்போதும் இருந்துவருகின்றனர்."

தாமிரப் பட்டயத்தில் இந்தி ஏன்?

நாட்டைச் சிதைத்த குற்றத்துக்கு ஆளாகாதீர்

டில்லி ஆட்சியாளர்களுக்கு கி. மனோகரன் எச்சரிக்கை

புதுடில்லி, ஆக. 17—

நேற்று முன் நாள் வீரத் தியாகிகட்கு டில்லியில் வழங்கப்பட்ட தாமிர பட்டயங்களில் வெறும் இந்தி வாசகங்களே பொறிக்கப்பட்டதை, மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் கி. மனோகரன், அவையில் கடுமையாகக் கண்டித்தார்.

"தாமிர பட்டயங்களில் இந்தி மொழியை மட்டுமே பயன்படுத்துவது என்று அரசு முடிவு செய்தது. அரசியல் சட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இரு மொழிக் கொள்கைக்கு எதிரானதாகும், தமிழ்நாட்டைப் போன்ற இந்தி தெரியாத பகுதிகளிலிருந்து வந்த விடுதலை வீரர்கள், அவர்கட்கு வழங்கப்பட்டுள்ள தாமிர பட்டயங்களில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதை எப்படிப் புரிந்துகொள்ள முடியும்? இந்த நடவடிக்கை இந்தி தெரியாத மக்கள்மீது மறைமுகமாக ஆதிக்கம் செலுத்தும் ஒரு செயலேயாகும்"

என்று மனோகரன் கூறியபோது, இந்தி மாநில உறுப்பினர்கள் பலரும் இடைமறிக்கத் தொடங்கினர்.

திரு. மனோகரன், அரசை எச்சரித்துத் தொடர்ந்து பேசியதாவது:—

"இதே கொள்கையையே அரசு தொடர்ந்து கடைபிடித்துவருமானால், 'ஒரு மாபெரும் நாட்டைச் சிதைத்தவர்கள் நீங்கள்' என்று வரலாறு உங்களைக் குற்றம் சாட்டும் நிலை ஏற்பட்டே தீரும்!

நடைபெற்ற நிகழ்ச்சி, சாதாரணமாக எடுத்துக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல; இதுபோன்ற நிலைமை நீடிப்பதற்கு அனுமதிப்போமானால், என்ன நேரிடும் என்பதைச் சொல்ல முடியாது."

துப்புரவுப் பணியில் பள்ளி மாணவர் ஈடுபாடு

பம்பாய், ஆக. 17—

பம்பாய் நகரத்தில் மாநகராட்சி ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்து வருவதையொட்டி நகரெங்கும் குப்பைக் கூளங்கள் குவிந்து கிடக்கின்றன.

இவைகளை அகற்றும் பணியில் இப்போது பள்ளிச் சிறுவர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

வறுமையின் கோரப் பிடியில் 40 சதவிகித மக்கள்

அடிப்படை வசதியின்றி அவதிப்படும் நிலை

புதுடில்லி, ஆக. 17—

இந்தியாவில் 22 கோடி மக்களுக்குமேல்--அதாவது மொத்த மக்கட் தொகையில் 40 சதவிகிதம் பேர் -- நியாயமான குறைந்தபட்ச வாழ்க்கை நிலைமையைவிடத் தாழ்ந்த நிலைமையில் வாழ்கிறார்கள்.

அதிகாரபூர்வமான மதிப்பீடு இது! நியாயமான குறைந்தபட்ச வாழ்க்கை நிலைமையை அடைய 1960-61 விலைவாசி அடிப்படையில் ஒரு நபர் மாதத்துக்கு ரூ. 20 செலவு செய்துகொள்ள முடிய வேண்டும்.

இதை மக்களவையில் தெரிவித்த திட்ட துணையமைச்சர் மோகன் தாரியா, 'எஞ்சியுள்ள நான்காம் திட்டக் காலத்திலும் -- ஐந்தாம் திட்டக் காலத்திலும் வறுமை நிலைக்குக் கீழே உள்ள மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதே முக்கியக் குறிக்கோளாக இருக்கும்' என்று கூறினார்.

இந்துக் கோயில்களில் பிற மதத்தவர்

அனுமதிக்கும் வகையில் சட்டத் திருத்தம்

நாகர்கோயில், ஆக. 17—

"இந்துக்களல்லாதவர்களை இந்துக் கோயில்களில் அனுமதிக்கக்கூடாதென்று அண்மையில் சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. எனவே இது சம்பந்தமான அரசியல் சட்ட விதியைத் திருத்துமாறு மத்திய அரசைத் தமிழ்நாடு அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது."

இத்தகவலை, வெள்ளி விழாவையொட்டி இங்கு நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பேசுகையில் அறநிலைய அமைச்சர் மு. கண்ணப்பன் அவர்கள் தெரிவித்தார்.

இல்லாமையால் கண்ணொளி இழக்கும் அவல நிலை

ஏழைக்குழந்தைகட்கு ஊட்டச்சத்து வழங்குவதன் மூலம் தவிர்க்கப்படும்

முதல்வரின் கண்ணொளி வழங்கும் திட்டத்துக்கு மத்திய உதவி -- பேராசிரியர் கோரிக்கை

சென்னை, ஆக. 16

"இன்று நம் நாட்டில் கண் நோயால் பாதிக்கப்பட்டுக் கண் பார்வை இழந்தவர்கள் பலர் இருக்கிறார்கள்; தமிழ்நாட்டில் மட்டும் 26,000 குழந்தைகள் கண்ணொளி இழந்திருக்கின்றனர்!

"கண் நோய் ஏற்படுவதும்--கண் பார்வை இழப்பதற்கும் காரணம் இளம் வயதில் போதிய உணவுச் சத்து இல்லாமைதான்; பொதுவாக ஏழைக் குழந்தைகளுக்கு 'ஏ' சத்து கொண்ட உணவு கிடைப்பதில்லை; கண் சிகிச்சை அளிப்பதோடு சத்து உணவும் குழந்தைகளுக்குக் கிடைக்கச் செய்யும் பணியில் தீவிரமாக இருக்க வேண்டும்; இந்தப் பணிகளுக்கு மத்திய அரசு நியாயமான உதவியளிக்க வேண்டும்"

என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

எழும்பூரிலுள்ள அரசு கண் மருத்துவமனையில் 20-வது தமிழ்நாடு கண் மருத்துவ மாநாட்டை ஆளுநர் கே. கே. ஷா துவக்கி வைத்துப் பேசினார்; 'கண் மருத்துவ நிறுவனங்கள் அல்லது தனிப்பட்ட கண் மருத்துவ நிபுணர்கள் குறிப்பிட்ட மாவட்டம் அல்லது தாலுகாவைத் தேர்ந்தெடுத்துச் சிகிச்சை அளிக்கலாம்' என்று அவர் குறிப்பிட்டார்.

முதலமைச்சர் கண் சிகிச்சை முகாம் திட்டத்தை ஆளுநர் பாராட்டினார்; 'இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதில் கண் மருத்துவ நிபுணர்கள் முக்கிய பங்கு வகிக்க வேண்டும்' என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மாநாட்டுக்குத் தலைமைவகித்துப் பேசிய மக்கள் நல்வாழ்வு அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், 'இவ்வாண்டில் நடக்கும் மூன்று கண் சிகிச்சை முகாம்களில் 50,000 பேருக்குக் 'காட்ராட்' அறுவைச் சிகிச்சை செய்யப்படும்' என்று தெரிவித்தார்.

"ஆண்டுக்கு இலட்சம் பேருக்கு 'காட்ராட்' அறுவைச் சிகிச்சை செய்யப்பட வேண்டுமென்ற இலக்கை அடைவதற்காக இவ்வசக் கண் சிகிச்சை முகாம்களுக்கான நடமாடும் மருத்துவமனைகள் எண்ணிக்கையை அதிகரிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது" என்று அவர் தெரிவித்தார்.

"புதிதாக மருத்துவப் பட்டம் பெறுபவர்கள் கண் மருத்துவத்தில் பயிற்சி பெற விரும்பினால், அவர்களுக்கு 'ஸ்டைபண்டு' (உதவித் தொகை) அளிக்கும் பிரச்சினையை அரசு பரிசீலித்து வருகிறது" என்று அவர் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் விசைக் கலப்பைத் தொழிற்சாலை

ரூ. 40 இலட்சம் செலவில் அமையும்

சென்னை, ஆக. 11—

"சிறு வயல்களில் பயன்படுத்தத் தக்க -- பல்வேறு பணிகளுக்குப் பயன்படத்தக்க விசைக் கலப்பைகளைத் தமிழகத்திலேயே தயாரிக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது"

என்று தொழிலமைச்சர் செ. மாதவன் அவர்கள், சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

இதன் தொடர்பாகக் கழக உறுப்பினர் சௌந்தரபாண்டியன் கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் கூறியதாவது:—

"ரூ. 40 இலட்சம் முதலீட்டுச் செலவில் ஆண்டொன்றுக்கு ரூ. 10,000 மதிப்புள்ள விசைக் கலப்பைகள் உற்பத்திச் செய்யும் தொழிற்சாலை ஒன்றைத் துவக்குவதற்கு 'சதர்ன் இண்டஸ்டிரியல் கார்ப்பரேஷன்' என்ற நிறுவனம் மத்திய அரசிடம் அனுமதி (லைசென்சு) கோரியிருக்கிறது; இது கிடைத்ததும், எந்த இடத்தில் இந்தத் தொழிற்சாலையைத் துவக்குவது என்பது குறித்து ஆய்ந்து முடிவு செய்யப்படும்."

துணைக் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அவர் குறிப்பிட்டதாவது:—

"விசைக் கலப்பைகளைத் தமிழ்நாட்டில் பயன்படுத்த முடியுமா என்று ஆராய்ச்சி நடத்தப்படுகிறது; 'தமிழ்நாட்டில் இயந்திரக் கலப்பைகளைத்தான் பயன்படுத்த முடியும் -- விசைக் கலப்பைகளைப் பயன்படுத்த முடியாது' என்ற ஒரு கருத்தும் உள்ளது."

மருத்துவக் கல்லூரியில் தொலைக் காட்சி

அறுவைச் சிகிச்சை நுணுக்கங்களைக் கற்பிக்க வாய்ப்பு

சென்னை, ஆக. 12—

"மாநகர் மருத்துவக் கல்லூரியில் பயிற்சி முறைகளையும் -- கல்வி முறைகளையும் உயர்த்தும் பொருட்டு ஒரு தொலைவிற்குள் செயல்படக்கூடிய தொலைக் காட்சிப் படப் பிரிவு ஒன்றை அமைப்பதற்கான செயற்குறிப்பு உள்ளதா? 'ஆம்' எனில், அதன் விவரங்கள் யாவை?'

என்று சட்டப் பேரவையில் என். கே. பழனிச்சாமி கேட்டார்; இதற்கு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் அளித்த பதில் வருமாறு:—

"ஆம்; சென்னை அரசுப் பொது மருத்துவமனையில் --- குறிப்பிட்ட ஒரு தொலைவிற்குள் செயல்படக்கூடிய தொலைக் காட்சிப் படப் பிரிவு ஒன்று அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டு மருத்துவக் கல்வி இயக்குநரிடமிருந்து செயற்குறிப்பு ஒன்று அரசுக்கு வந்துள்ளது; இது அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டது; 1972-73-ம் ஆண்டு இது நிறைவேற்றப்படும்.

"இந்தத் தொலைக் காட்சிப் படப் பிரிவு அமைப்பதன் மூலம் அறுவைச் சிகிச்சைக் கூடத்தில் செய்யப்படும் அறுவைச் சிகிச்சையின் தொழில்நுட்ப உத்திகள் விவரங்கள் முழுவதையும் தொலைக் காட்சிப் படத் திரையில் தெளிவாகக் காணமுடியும்; அறுவைச் சிகிச்சைக் கூடத்திலிருந்து தொலைவிலுள்ள விரிவுரை நடைபெறும் அறையில் அறுவைச் சிகிச்சை செய்யும் மருத்துவர் கூறும் விளக்கங்களை தெளிவாகக் கேட்க இயலும்."

தந்தை பெரியார் -- முதலமைச்சர் கலைஞர் -- அமைச்சர்கள் ப. உ. சண்முகம் -- எஸ். இராமச்சந்திரன் ஆகியோருக்கு கடலூர் நகராட்சி வரவேற்பு

கடலூரின் தேவைகள் -- உரிய நேரத்தில் கவனிக்கப்படும்

வரவேற்பு விழாவில் முதலமைச்சர் உறுதி

கடலூர், ஆக. 16—

கடலூர் நகராட்சி மன்றத்தின் சார்பில் முதலமைச்சர் கலைஞர் -- தந்தை பெரியார் -- அமைச்சர்கள் ப. உ. சண்முகம், எஸ். இராமச்சந்திரன் ஆகியோருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

வரவேற்பு நிகழ்ச்சிக்கு பாபு கோவிந்தராசன் எம்.எல்.ஏ. தலைமைதாங்கிப் பேசுகையில், கடலூரின் தேவைகள் சிலவற்றைக் குறிப்பிட்டார்.

நகராட்சித் தலைவர் இரா. சுப்பிரமணியம் வரவேற்புரையாற்றுகையில், கோரிக்கைகள் சிலவற்றை வலியுறுத்தினார்.

விழாவில், மேலவைத் தலைவர் சி. பி. சிற்றரசு, சட்டமன்ற -- நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

தந்தை பெரியார்

வரவேற்புக்குநன்றி தெரிவித்துத் தந்தை பெரியார் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மக்கள் சமுதாயத்திற்குத் தொண்டாற்றுகின்றவர்களுக்கு இதுபோன்ற வரவேற்புகள் தரப்படுவதால்தான் மகிழ்ச்சியும் ஊக்கமும் ஏற்படுகிறது; அந்த அளவுக்கு மக்கள் திருந்தியிருக்கிறார்கள் என்பதும் வெளிப்படுகிறது."

முதலமைச்சர் கலைஞர்

வரவேற்புக்கு நன்றி தெரிவித்து முதலமைச்சர் கலைஞர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"கடலூரின் தேவைகளைப்பற்றி பாபு கோவிந்தராசன் விவரமான பட்டியல் போட்டுத்தருமானால், நிச்சயம் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

"நகராட்சித் தலைவரின் கோரிக்கைகளும் உரிய நேரத்தில் பரிசீலிக்கப்படும் என, உறுதி கூறினார்."

(8-ம் பத்தித் தொடர்ச்சி)

பலன்களை அடைந்து வருகிறோம்; கட்டுப்பாடாக இந்த ஆட்சிக்கு ஆதரவு தருவது நமது கடமையாகும்.

நல்லது செய்கின்ற -- செய்து வருகின்ற தி. மு. கழக அரசைக் கவிழ்க்க எண்ணி சில கட்சிகள் சேர்ந்திருக்கின்றன; நம்பிக்கையில்லாத் தீர்மானங்களைக் கொண்டுவந்திருக்கின்றன; எவ்வளவோ குறைகளை அப்போது சொன்னார்கள் -- விஷமப் பிரச்சாரமே செய்தார்கள்!

அப்படிப்பட்டவர்களுக்கு நாம் நல்ல பாடம் கற்பிக்க வேண்டும் -- ஏமாந்து போகக்கூடாது!"

(4-ம் பத்தித் தொடர்ச்சி)

திய மரபைச் சேர்ந்தவர்கள் வாழ்கிறார்கள்.

ஆப்பிரிக்காவில் இந்திய மரபைச் சேர்ந்தவர்களில் பெரும்பாலானவர்கள் தென்னாப்பிரிக்காவில் இருக்கிறார்கள்; அவர்கள் அனைவருக்கும் அந்த நாட்டின் குடியுரிமை கிடைத்துள்ளது.

கென்யாவில் 1,39,000 பேர்களும், தான்சானியாவில் 1,02,000 பேர்களும் உள்ளனர்; கென்யாவில் 78,000 பேர்களுக்கும், தான்சானியாவில் 67,000 பேர்களுக்கும் குடியுரிமை இன்னும் கிடைக்கவில்லை.

மாலவி நாட்டில் 11,800 பேர் உள்ளனர்; அவர்களில் 100 பேர்களுக்கு மேலாக குடியுரிமை கிடைக்கவில்லை.

ஜாம்பியாவில் 12,000 பேர் இருக்கிறார்கள்; அவர்களில் 300 பேர்களுக்கு மட்டுமே குடியுரிமை கிடைத்துள்ளது."

கடல் கடந்த நாடுகளில் இந்திய மரபினர்

குடியுரிமை பெறாமலே வாழ்ந்துவரும் நிலை

நாடாளுமன்றத்தில் அமைச்சர் தந்த விவரம்

புதுடில்லி, ஆக. 16—

"வெளிநாடுகளில் வாழும் இந்திய மரபினர் பிரச்சினையை மனிதாபிமானப் பிரச்சினையாகக் கருதுமாறு சம்பந்தப்பட்ட வெளிநாடுகளை வற்புறுத்த அரசியல் துறைகளின் மூலம் முயற்சிகள் நடக்கின்றன; அதே சமயத்தில், வெளிநாடுகளிலுள்ள இந்திய மரபினர் -- அவர்கள் வாழும் நாட்டு மக்களுடன் கலந்துவிட வேண்டும் என்றும், அந்த நாட்டின் குடிமக்களாக ஆகிவிட வேண்டும் என்றும் இந்தியா அவர்களைத் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது"

என்று வெளிவிவகாரத் துணையமைச்சர் சுரேந்திர பால் சிங், மக்களவையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்; அவர் மேலும் விளக்கியதாவது:—

"பத்து வெளிநாடுகளில் வாழும் இந்திய மரபைச் சேர்ந்த மக்களின் எண்ணிக்கை 34 இலட்சம் ஆகும்; இவர்களில் 17 இலட்சம் பேர் அந்தந்த நாடுகளின் குடிமக்களாக ஆகவில்லை.

பிரிட்டிஷ் 'பாஸ்போர்ட்' வைத்துள்ள ஆசிரியர்கள் அனைவரும் மூன்று மாதங்களுக்குள் வெளியேற வேண்டும் என்று உகாந்தா நாட்டு அதிபர் அறிவித்திருக்கிறார்; அங்கு இந்திய மரபைச் சேர்ந்தவர்கள் 73,000 பேர் இருக்கிறார்கள்; இவர்களில் 43,000 பேர் அந்த நாட்டின் குடியுரிமையை இன்னும் பெறவில்லை.

அயல்நாடுகளில் உள்ள இந்திய மரபைச் சேர்ந்தவர்களில், இலங்கையில்தான் மிக அதிக மானவர்கள் இருக்கிறார்கள்; அங்கு 12 இலட்சம் பேர் உள்ளனர்; அவர்களில் 10 இலட்சம் பேர்களுக்குக் குடியுரிமை இல்லை.

மலாசியாவில் 95,000 பேர் இந்

(3-ம் பத்தி பார்க்க)

பள்ளிப் பிள்ளைகளுக்கு மருத்துவச் சோதனை

1.20 இலட்சம் மாணவர்கள் பயன் பெறும் திட்டம்

சென்னையில் செயல்படுத்த அனுமதி --- அமைச்சர் க. அன்பழகன் அறிவிப்பு

சென்னை, ஆக. 15—

"பள்ளிக்கூட மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை நடத்தும் திட்டத்துக்கு அரசு அனுமதி அளித்திருக்கிறது"

என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தெரிவித்தார்.

செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் அவர் இதுபற்றிக் கூறியதாவது:—

"சென்னை நகரிலுள்ள துவக்கப் பள்ளிக்கூட மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யும் திட்டம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது; அதன்படி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி வட்டாரத்திலுள்ள 35 துவக்கப் பள்ளிக்கூடங்களைச் சேர்ந்த 5,000 மாணவர்கள்பற்றிக் கணக்கு எடுக்கப்பட்டது.

1-வது வகுப்புமுதல் 4-வது வகுப்பு வரையில் உள்ள மாணவர்களை மருத்துவர்கள் பரிசோதித்து, அவர்களுக்கு என்ன நோய் இருக்கிறது -- எப்படிக் குணப்படுத்தவேண்டும் -- அதற்கு என்ன செலவாகும் என்று கணக்கு எடுக்கப்பட்டது.

4,177 மாணவர்களைப் பரிசோதித்ததில் 1050 மாணவர்களுக்கு நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது; இவர்களுக்குப் பரிசோதனை நடந்தி, 'மாந்து கொடுக்கும் செலவு ஒரு மாணவருக்கு ரூ. 2.25 ஆகும்' என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

இந்த அடிப்படையில், சென்னையிலுள்ள 6-இலட்சம் மாணவர்களில், 1-வது வகுப்புமுதல் 4-வது வகுப்புவரையில் படிக்கின்ற 1,20,000 மாணவர்கட்கு இந்தத் திட்டத்தின்கீழ் சிகிச்சையளிக்க அனுமதி கொடுக்கப்பட்டுவிட்டது.

சென்னையிலுள்ள 6 மருத்துவமனைகளிலும், 'பள்ளிக்கூடப் பிள்ளைகள் பிரிவு' என்று ஒரு பிரிவு ஏற்படுத்தப்படும்; ஒவ்வொரு பிரிவிலும், டாக்டர்கள் உட்பட 5 பேர் பணியாற்றுவார்கள்; பள்ளிக்கூடத்திற்குப் போய் மாணவர்களைப் பரிசோதித்து மருந்து கொடுப்பதற்கான ஏற்பாடுகளை அவர்கள் செய்வார்கள்.

இந்தத் திட்டத்திற்கு ஆகும் செலவு 4-வது ஐந்தாண்டுத் திட்ட மீதிக் காலத்தில் ரூ. 9,60,000 ஆகும் என்றும், 5-வது திட்டக் காலத்தில் சுமார் ரூ 29 இலட்சம் செலவாகும் என்று கணக்கிடப்பட்டு அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

சிறு பிள்ளைகளுக்குத் துவக்கக் காலத்திலேயே சில நோய்களைக் குணப்படுத்திவிட்டால், பிறகு தொல்லைகள் இருக்காது" என்ற அடிப்படைக் கருத்தில் இந்தத் திட்டம் செயல்படுகிறது.

சித்த மருத்துவப் பதிவு

சித்த—ஆயுர்வேத—மருத்துவ முறைகளைப் பரம்பரையாகவோ அல்லது பயிற்சி மூலமோ கற்றுத் தொழில் நடத்துகின்ற மருத்துவர்களை எல்லாம் பதிவு செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது; இப்படிப் பதிவு செய்தவர்கள், 'பி' வகுப்பு மருத்துவர்கள் என்று அழைக்கப்படுவார்கள்.

பதிவு செய்வதற்கான காலத்தை அடுத்த ஆண்டு மார்ச் 31-ந் தேதிவரை கடைசி வாய்ப்பாக நீடித்திருக்கிறோம்; இதில் பதிவு செய்துகொள்ள விரும்புகிறவர்கள், வாய்மூலம்--எழுத்து மூலம் பரீட்சைக்கான ரூ 10 கட்டணத்தைச் செலுத்தவேண்டும்; பரீட்சைத் தேதி பின்னால் அறிவிக்கப்படும்.

உள்நாட்டு மருத்துவருக்கான மத்திய வாரியம் நடத்தும் பரிட்சையில் தேறுதவர்களும் -- எழுதாதவர்களும் இங்கு பதிவு செய்துகொள்ளலாம்; இதற்குப் பணம் அனுப்பும் கடைசித் தேதி செப்டம்பர் 15 ஆகும்."

வானொலி -- படக் காட்சிகள் மூலம் கல்வி

எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் ஏற்பாடு

சென்னை, ஆக. 11—

"தமிழ்நாட்டில் உள்ள எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும், வானொலிப் பெட்டி மூலம் மாணவ -- மாணவிகட்குப் பொது அறிவு வளர்ச்சிக்கு வழி செய்யப்பட்டுள்ளது; மின்சார வசதி இல்லாத பள்ளிகளில்கூட மின்கலப் பெட்டிகள் வைத்துக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

"உயர் துவக்கப் பள்ளிகளிலும் பெரும்பாலும் வானொலிப் பெட்டி வைக்கப்பட்டுள்ளது; திரைப்படம் காட்டும் கருவிகள் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் திரைப்படக் காட்சி மூலமும் கல்வி கற்பிக்கப்படுகிறது"

என்று சட்டப் பேரவையில், கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தெரிவித்தார்.

இதன் தொடர்பாக உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளும் -- அமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு:—

வீராசாமி (தி.மு.க.):— "தமிழ்நாட்டில் பள்ளி மாணவர்கட்கு வானொலிப் பெட்டிமூலம் பாடம் கற்றுக் கொடுக்கப்படுகிறது; மாணவர்கள் பொது அறிவுக்கான செய்திகளைத் தயாரிக்கும் பொறுப்பை மத்திய அரசின் அதிகாரிகளே செய்கிறார்களா அல்லது மாநில அரசைக் கலந்து கொண்டு செய்கிறார்களா?"

அமைச்சர்:—"திருச்சி, சென்னை ஆகிய இரண்டு வானொலி நிலையங்களிலிருந்தும் பள்ளிக்கூடப் பாடங்களை வானொலியில் ஒலிபரப்புவதற்குத் தமிழகக் கல்வித் துறையினரைக் கலந்து கொண்டே--ஆசிரியர் போன்றவர்களை நியமித்துச் செய்கிறார்கள்."

பரந்தாமன் (தி.மு.க.):—"மாணவர்களுக்குப் பாடத்தை ஒலிபரப்பும் நேரத்தில், திரைப்பட இசைகள் ஒலிபரப்புவது தடை செய்யப்படுமா?"

அமைச்சர்:—"திரைப்பட இசைகள் ஒலிபரப்புவதைத் தடை செய்ய முடியாது; பாடம் நடக்கும் நேரத்தில் திரைப்பட இசைகள் ஒலிபரப்பப்படுவதில்லை"

கோவை செழியன் (தி.மு.க.):— "சில வகுப்புக்களில் பாடம் நடத்தும்போது மாணவர்கட்குச் சலிப்பு ஏற்பட்டுவிடுகிறது; இதனால் பாடம் புரிவதில்லை; ஆகவே, நேரில் பார்ப்பது போன்று பாடங்களைத் திரைப்படமாகக் காட்டினால் மாணவர்களுக்கு நன்கு புரியும்; சேரன் செங்குட்டுவன், கனக-விசயர் தலையில் கல் சுமக்க வைத்ததைத் திரைப் படமாகக் காட்டினால் நன்கு புரியும்; அவ்வாறு செய்யப்படுமா?"

அமைச்சர்:— "இப்போதுகூட அம்முறை பின்பற்றப்படுகிறது; சில பாடங்கள் திரைப் படமாக தயாரிக்கப்பட்டுப் பள்ளிக்கூடங்களில் காட்டப்படுகிறது; வெளிநாட்டுத் தூதுவர் அலுவலகங்களில் அப்படிப்பட்ட படங்கள் கொடுக்கப்படுகின்றன; அதைப் பலர் பயன்படுத்துகிறார்கள்."

ஏ. எம். இராசா (தி.மு.க.):— "வானொலியில் கல்லூரிப் பாடத்தைக்கூட ஒலிபரப்புகிறார்கள்; டெல்லி பல்கலைக் கழகத்தினர், வானொலி மூலம் இரவு 10-மணிக்கு அப்படி ஒலிபரப்புகிறார்கள்; அதேபோன்று, மதுரைப் பல்கலைக் கழகத்திலும் இரவில் வானொலியில் பாடம் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா? காலை 6-மணிக்கும் அவ்வாறே பாடத்தை ஒலிபரப்பலாமே?"

அமைச்சர்:— "மதுரையில் சென்ற ஆண்டிலிருந்து தபால் மூலம் கல்வி கற்பிக்கிறார்கள்; வானொலி மூலம் ஒலிபரப்ப தனி ஏற்பாடு செய்ய வேண்டும்; மதுரையில் இன்னும் வானொலி நிலையம் வரவில்லை. இயன்ற அளவுக்கு இந்த வகையில் அரசு உதவத் தயாராக இருக்கிறது."

பிற்பட்டோரை உயர்த்திய பெருமை கழக அரசுக்கு உண்டு

அடித்தளத்தில் உள்ள மக்களின் மறுமலர்ச்சிக்குப் பாடுபடுவது தமிழக அரசுதான்

ஏ. கோவிந்தசாமி கல்லூரி கட்டடத் திறப்பு விழாவில் கலைஞர் விளக்கம்

திண்டிவனம், ஆக. 14—

"காங்கிரசு ஆட்சிக் காலத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களின் கல்விக்காக 25 சதவிகிதமும்--தாழ்த்தப்பட்ட மக்களின் கல்விக்காக 14 சதவிகிதமும் செலவிடப்பட்டது, இதை, பிற்படுத்தப்பட்ட மக்களின் கல்விக்காக 31 சதவிகிதம் என்றும், தாழ்த்தப்பட்ட மக்களின் கல்விக்காக 18 சதவிகிதம் என்றும் உயர்த்திய பெருமை கழக அரசுக்கு உண்டு!

'காங்கிரசு ஆட்சியில் நான்கு ஆண்டுக் காலத்தில், பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக ரூ. 90 இலட்சம் செலவு செய்யப்பட்டது; கழக ஆட்சியில், இரண்டாண்டுக் காலத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக ரூ. 4 கோடி அளவில் செலவு செய்திருக்கிறோம்!

'பிற்படுத்தப்பட்ட மக்கள் முன்னேற்றத்திற்காகத் தனியாக அமைச்சர் ஒருவரை நியமித்து -- அடித்தளத்தில் வீழ்த்தப்பட்ட மக்களின் மறுமலர்ச்சிக்கு முயற்சி செய்து வரும் அரசு தமிழக அரசுதான்!"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மறைந்த அமைச்சர் ஏ. கோவிந்தசாமியின் பெயரால் நடைபெற்றுவரும் கல்லூரியின் புதிய கட்டடத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்.

விழாவுக்கு அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் தலைமைதாங்கினார்.

அமைச்சர் ப. உ. சண்முகம், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி. இராசாராம், என். முத்துவேல், ஆர். ஆர். முனுசாமி, திண்டிவனம் நகராட்சித் துணைத் தலைவர் எஸ். பக்கிரி, மாவட்டச் செயலாளர் விருத்தாசலம் செல்வராசு, வட்டச் செயலாளர் சங்கர் மற்றும் பலர் பேசினர்.

சட்டமன்ற உறுப்பினர் எஸ். சகாதேவன் நன்றி கூறினார்.

திண்டிவனத்தை அடுத்த மேல் பாக்கத்தில் உள்ள கோவிந்தசாமி கல்லூரியின் புதிய கட்டடத்தைத் திறந்துவைத்து முதலமைச்சர் கலைஞர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்த மறைந்த அமைச்சர் கோவிந்தசாமி, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக உழைத்தார்; அமைச்சரவையில் இருந்தபோது, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகவும் -- தமிழ்நாட்டு மக்களுக்காகவும் பாடுபட்டார்; அவர்களால், நாட்டு மக்களுக்குச் சேவை செய்யும் விதத்தில் கல்வி அமையவேண்டும்.

பெற்றோர்களும்--ஆசிரியர்களும், 'படி' என்று கூறுவார்கள்; 'படி' என்றால், 'பணிந்து நட' என்றும், 'அடக்கம்' என்றும் பொருள் உண்டு.

படிந்தால்தான் -- அதாவது அடக்கத்துடன் பணிந்தால்தான், வாழ்க்கையில் உயர்மட்டத்திற்கு ஏறும் படிக்கட்டுகள் நன்மை நோக்கி வரும்; அந்த வகையில் படித்து -- பல முன்னேற்றப் படிகளில் ஏறிட வேண்டும்.

கழக அரசுதான் கல்விக்காக அதிகம் செலவிட்டு இருக்கிறது -- கல்வி வளர்ச்சிக்காக ரூ. 110 கோடி செலவு செய்திருக்கிறோம்.

பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்த கோவிந்தசாமியின் பெயரால் நடைபெற்றுவரும் இந்தக் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள், வீட்டுக்கும் -- நாட்டுக்கும் சேவை செய்யும் கல்வி பெற்றுத் தொண்டாற்ற வரவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்."

நூலகக் கட்டடத் திறப்பு

கல்லூரியின் நூலகக் கட்டடத்தை, திரு. அன்பில் தர்மலிங்கம் எம்.எல்.ஏ. தலைமையில் அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் திறந்துவைத்தார்.

நகராட்சி வரவேற்பு

முதலமைச்சருக்குத் திண்டிவனம் நகராட்சி சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

கல்லூரி மாணவர்கள் சார்பிலும், நிலவள வங்கி சார்பிலும், மற்றும் பல அமைப்புகளின் சார்பிலும் அவருக்குப் பொன்னாடைகள் போர்த்தப்பட்டன.

முன்னதாக, திண்டிவனத்துக்கு செல்லும் வழிநெடுகிலும் ஊராட்சிகள் -- ஊராட்சி ஒன்றியங்கள் சார்பில் நாதசுரம் -- பேண்டு -- வாத்தியங்கள் முழங்க முதலமைச்சருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

தி. மு. கழகத்தில் சேர்ந்தார்

திண்டிவனம் நகராட்சி இந்திரா காங்கிரசுக் கட்சி உறுப்பினர் இராமலிங்கம், அந்தக் கட்சியிலிருந்து விலகிவிட்டார்; கல்லூரிக் கட்டடத் திறப்பு விழாவின்போது முதலமைச்சர் முன்னிலையில் அவர் தி. மு. கழகத்தில் சேர்ந்தார்.

கடலூரில் பெரியார் சிலை

முதலமைச்சர் கலைஞர் திறந்துவைத்தார்

கடலூர், ஆக. 16—

கடலூர் கெடில நதி பாலத்தின் கிழக்குக் கரையில் அமைக்கப்பட்டுள்ள தந்தை பெரியார் அவர்களின் வெண்கலத்தினாலான முழு அளவு உருவச் சிலையை, முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆக. 13-ம் நாளன்று திறந்துவைத்து, சமுதாயத்தில் நிலவும் இழிவுகளைப் போக்கத் தள்ளாத வயதிலும் தந்தை பெரியார் பாடுபட்டு வருவதைச் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்.

சிலை திறப்பு விழாவிற்கு முன்னர், தந்தை பெரியார் அவர்களும்--கலைஞர் அவர்களும் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

ஊர்வலம் முடிந்ததும், தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலையை கலைஞர் திறந்துவைத்து உரையாற்றினார்.

'பெரியார்' என்ற சொல்லில் தன்மானப் பேரிகை முழங்குகிறது!

கடலூர் பொதுக்கூட்டத்தில் கலைஞர் புகழாரம்

மாலை 7 மணி அளவில் கடலூர் மஞ்சக்குப்பம் மைதானத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு, திரு. சி. பி. சிற்றரசு தலைமை வகித்தார்.

முதல்வர் கலைஞர், தந்தை பெரியார், அமைச்சர்கள் ப. உ. சண்முகம், எஸ். இராமச்சந்திரன் ஆகியோரும், அன்பில் தர்மலிங்கம் எம்.எல்.ஏ., தெ. ஆ. மாவட்டச் செயலாளர் செல்வராசு, கி. வீரமணி ஆகியோரும் பேசினர்.

முதலமைச்சர் கலைஞர்

கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"எந்த விழிப்பற்ற சமுதாயத்தைக் காண வேண்டுமென்று தந்தை பெரியார் அவர்கள் ஆர்த்தெழுந்தார்களோ -- 'பகுத்தறிவுபுரியாக இந்தத் தமிழகம் மாறவேண்டும்' என்று அரும்பாடுபட்டு வந்தார்களோ அந்தக் கனவு முழுமையாக நிறைவேறுவதுதான் --நிறைவேற்றிக் காட்டுவதுதான், பெரியார் அவர்களின் அயராத பணிக்கு -- அல்லும் பகலும் ஆற்றிய தொண்டுக்கு நாம வழங்குகின்ற உண்மையான நன்றிக் கடனாகும்.

பெரியார் அவர்கள் ஒரு வில் ஆவார்; அந்த வில்லிலிருந்து புறப்பட்ட அம்புகள் ஆயிரமாயிரமாகும்.

அந்த வில்லிலிருந்து புறப்பட்ட கணைகள் -- அம்புகள் -- கடவுளின் பெயரால் ஓமாற்றுகிறவர்களின் விலா எலும்புகளையெல்லாம் குத்திக் கிழித்திருக்கின்றன!

அந்த வில்லிலிருந்து புறப்பட்ட கணைகள் -- 'சாதித் துவேஷம்' என்கின்ற மிருகத்தை வேட்டையாடியிருக்கிறது!

அந்த வில்லிலிருந்து புறப்பட்ட கணைகள் -- மதவாதத்தின் பெயரால் மக்களை ஏமாற்றியவர்களையெல்லாம் நொறுக்கியிருக்கிறது!

சாதியின் பெயரால் -- மதத்தின் பெயரால் -- கடவுளின் பெயரால் ஏமாற்றியவர்கள் எங்கெங்கு இருக்கிறார்களோ அவர்களையெல்லாம், சல்லடைக் கண்களாக ஆக்கியிருக்கின்றன!

'பெரியார்' என்றால், ஒரு தனிப்பட்ட மனிதராக அவரைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை -- ஒரு சமுதாயத்தைச் சொல்கிறேன்; ஒரு காலக்கட்டத்தை -- அத்தியாயத்தைச் சொல்கிறேன்; ஓர் இயக்கத்தைச் சொல்கிறேன்.

'பெரியார்' என்ற சொல்லை உச்சரிக்கின்ற நேரத்தில், அதிலே சுயமரியாதை இயக்கம் -- நீதிக் கட்சி -- திராவிடர் இயக்கம் ஆகியவைகள் அடங்கியிருக்கின்றன! அதிலே -- திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சி அடங்கியிருக்கிறது!

'பெரியார்' என்ற அந்த வார்த்தையிலேதான், தன்மானப் பேரிகை முழங்கிக் கொண்டிருக்கிறது!"

விஷமிகளுக்கு நல்ல பாடம் கற்பிப்போம்

தந்தை பெரியார் அறைகூவல்

கூட்டத்தில் தந்தை பெரியார் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மக்கள் பகுத்தறிவுவாதிகளாக மாறி வருகிறார்கள் -- அவர்களிடையேயிருந்து மூடநம்பிக்கை விலகி வருகிறது!

மக்கள் நல்ல அளவுக்குத் திருந்தியிருக்கிறார்கள் -- மேலும் திருந்தி வருகிறார்கள்!

நம்முடைய ஆட்சி மக்கள் உள்ளத்தில் நன்றாகப் பதிந்துவிட்டது; மக்கள் இந்த ஆட்சிக்கு ஆதரவு தருகிறார்கள்!

நம் நாட்டில் படித்தவர்கள் தொகை மிகக் குறைவு; நூற்றுக்கு மூன்று பேர் படித்தவர்களாகவும், எழுபது பேர் தற்குறிகளாகவும் இருக்கிறார்கள்; ஆகவே, இத்துறையில் இதற்கான பணிகள் வேகமாக நடக்க வேண்டும்; அது கழக ஆட்சியில்தான் நடக்கும்!

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் பல நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன; பல சாதிக்காரர்களும் நன்மை யடைந்திருக்கின்றனர்; ஆகவே, நாம் இந்த ஆட்சியை ஆதரிக்க வேண்டும்.

அந்தக் காலத்தில் நாம் உத்தியோகத்தில் எந்த அளவுக்கு இருந்தோம் என்று எண்ணிப் பார்க்க வேண்டும்; இன்று எந்த அளவுக்கு இருக்கிறோம் என்றும் சிந்திக்க வேண்டும்.

இந்த ஆட்சியால் நல்லமுன்னேற்றம் கண்டிருக்கிறோம் -- நல்ல

(2-ம் பத்தி பார்க்க)

பேராசிரியர்களை நியமிக்கும் பொறுப்பு -- அரசே ஏற்குமா?

அமைச்சர் நாவலர் பதில்

சென்னை, ஆக. 11—

"கனியார் கல்லூரிகளிலும் பேராசிரியர்களை நியமிக்கும் பொறுப்பை அரசே ஏற்றுச் செய்யுமா?"

என்று, சட்டப் பேரவையில், கழக உறுப்பினர் பரந்தாமன் வினவினார்.

அமைச்சர் நாவலர்:—"அந்தக் கோரிக்கைதான் கேரளத்தில் பெரிய கிளர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது; படிப்படியாக எதிர்காலத்தில் அந்த நிலைமையை எதிர்பார்க்க வேண்டும்.

"அதேநேரத்தில், இப்போதும் அந்த வேலைக்குரிய தகுதி -- திறமையை நிர்ணயித்திருக்கிறோம்; அதில் ஏதும் குறையாமல் -- அந்த அளவில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று நிர்ணயித்திருக்கிறோம்."

மருத்துவமனையில் படக்காட்சி

சென்னை, ஆக. 12—

"அரசு மருத்துவமனைகளில், சுகாதாரத் திரைப் படங்களைக் காட்டுவதற்காகத் தியேட்டர் கட்டப்படுமா?"

என்று, சட்டப்பேரவையில் ஏ. சுப்பிரமணியம் கேட்டார்.

"தற்சமயம் அப்படி உத்தேசம் இல்லை"

என்று, அமைச்சர் க. அன்பழகன் பதிலளித்தார்.

முருகு பாண்டியன்

கலை நிகழ்ச்சிகள்

ஆக. 18: வீரசோழன்; 19: பரமன் குறிச்சி; 22: தா. பழூர்; 27: சிதம்பரம்.

அரிமா நோக்குடன் முன்னேறுவோம்

சென்னை, ஆக. 14—

"நமது நாடு அடிமைப்பட்டுக் கிடந்த நாட்களில் -- விடுதலை வேட்கை கொண்ட மலர், துப்பாக்கிக்குத் துப்பாக்கி -- பீரங்கிக்குப் பீரங்கி -- என்று போரிட்டனர்!

"இன்னும் சிலர், 'வெள்ளையர்களிடம் ஒட்டிச் சென்று உரிமை பெறலாம்' என நினைத்தனர்!

வெட்டி வீழ்த்தும் முறைக்கும் -- ஒட்டிச் செல்லும் முறைக்கும் இடையே அகிம்சா நெறி கண்டார் காந்தியார்!

அவர் வழிநின்று தியாகங்கள் பல செய்தனர் தியாகிகள்; உடலை -- உயிரைத் தியாகம் செய்த வீரர்கள் பட்டியல் பெரிது; அவர்கட்கு நமது அஞ்சலியைத் செலுத்துகிறோம்!

அந்தத் தியாகிகளைப் பற்றி அறிஞர் அண்ணா குறிப்பிடுகையில், 'சாதாரண நீரைத் தென்னை மரத்தின் அடியில் ஊற்றினாலும் சுவையுள்ள நீரைத் தரும் இளநீரைப் போன்றவர்கள் அவர்கள்' என்றார்!

இன்னொருமுறை அறிஞர் அண்ணா அவர்கள், '1947 ஆகஸ்டு 15-ம் நாள், அந்நிய ஆதிக்கத்துடன் நாம் கணக்குத் தீர்த்த நாள்; அதற்குப் பிறகு வரும் ஆகஸ்டு 15-ம் நாட்கள் அனைத்தும், 'நாம் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறோம் என்பதைக் கணக்குப் பார்க்கும் நாட்கள்' என்றார்!

'ஆனந்த சுதந்தரம் அடைந்து விட்டோம்' எனப் பாடினார் பாரதியார்; ஆனால், ஆனந்த வாழ்வு இன்னும் வரவில்லை -- அதனைப் பெறப் பாடுபடுவோம்!

'எங்கிருந்து வந்தோம்' எனப் பார்ப்பதைவிட, 'நாம் எங்கே போகிறோம்' என்று பார்க்க வேண்டும்!

வந்த வழியைத் திருப்பிப் பார்த்து -- செல்லவேண்டிய வழியை நிமிர்ந்து பார்க்குமாம் சிங்கம்; அதற்குத்தான், 'அரிமா நோக்கு' என்பார்கள்; அத்தகைய அரிமா நோக்குடன் நாம் முன்னேற வேண்டும்!"

-- அமைச்சர் நாவலர்

(சட்டமன்ற சிறப்புக் கூட்டத்திலே)

முற்போக்குக் கொள்கை வழிநின்று முன்னேறுவோம்

[*]

நம்முடைய ஒவ்வொரு பணியிலும் புதிய சோதனைகள் பல ஏற்படக் கூடும்; நல்ல பண்புகள் மூலம் அவைகளைச் சமாளிப்போம்

ஏக்கப் பெருமூச்சு விடுவதற்கு இனி நேரமில்லை; கணக்குப் பார்க்கும் நாளை கவனத்தில் கொள்வோம்

சென்னை, ஆக. 15—

"அடித்தளத்தில் அழுந்திக் கிடக்கின்ற மக்களுக்கு வாழ்வில் ஆனந்த அருவி பாய்ந்திடச் செய்வதுதான் சுதந்தரம் பெற்றதன் பயன் என்பதை அறிந்து செயலாற்றி வருகின்றோம்!

சுதந்தரத்திற்குத் தந்த விலை மதிப்பில்லாதது -- உண்மைதான்; ஆனால் தியாகிகளைப் பாராட்டும் அதே நேரத்தில், 'இது ஒன்றுதான் நம் வேலை' என்று எண்ணிடாமல், எதற்காகச் சுதந்தரம் கேட்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறச் செயலாற்ற முனைதல் வேண்டும்.

புரட்சிக் கனலால் புதையுண்ட நாடுகளின் புதிய வடிவங்கள் கண்ணுக்குத் தெரிகின்றன -- களிப்பூட்டும் வகையில்!

போரின் கோர தாண்டவத்தால் அழிந்துவிட்ட நாடுகளின் ஏற்றமும் எழிலும் எவ்வளவு விரைவில் பூத்துக் குலுங்குகின்றன -- என்று வியந்திருக்கிறோம்!

இங்கு அடிமை ஒழிந்து ஆண்டுகள் பலவாயினும், அகிலத்தில் தலைதூக்கிச் செழுமை மிகுந்த சித்திரப் புன்னகையைக் காட்ட முடியாமல் ஏக்கப் பெருமூச்சு விடுகின்றோமே -- எதனால்? சிந்திக்க வேண்டாமா? சிந்தித்துச் செயல்பட வேண்டாமா?

'நமது இந்தியாவின் உயிர்நாடி கிராமங்களில்தான் உள்ளது; அந்த அடிப்படையில்தான் நமது பணிகள் அமைய வேண்டும்; நம்முடைய ஒவ்வொரு பணியிலும் புதிய புதிய சோதனைகள் ஏற்படலாம்; பணிவு -- எளிமை -- அகிம்சை -- பொறுமை ஆகிய நல்ல பண்புகளினால் அந்தச் சோதனைகளில் நாம் வெற்றி பெற்றுவிடலாம்" என்று உத்தமர் காந்தி உரைத்திட்டார் பல முறையும்!

அந்த அண்ணல் வழிதான் அண்ணன் தந்த வழியென்று -- நம் அயராத உழைப்பையெல்லாம் சிற்றூரிலும், வரப்பெடுத்த வயல்களிலும், ஆறு தேக்கிய நல்வாய்க்கால்களிலும் வகைப்படுத்தி -- பசுமைப் புரட்சி செய்து -- தீவிரச் சாகுபடி மூலம் உணவிலே தன்னிறைவு பெற்றிருக்கிறோம்!

நகரத்தின் வசதிகள் கிராமங்களை அலங்கரிக்க வேண்டுமென்பதற்காக -- 'மின் விளக்கில்லாத கிராமங்களே இருத்தலாகாது' என்று உறுதியெடுத்து -- அந்தப் பணியினைப் பெரும் பகுதி முடித்து விட்டோம்!

இணைப்புச் சாலைகள் -- மாநிலம் முழுவதிலுமுள்ள எல்லாக் கிராமங்களையும் சில ஆண்டுகளில் இணைத்துவிடும்!

குடிநீர் வாரியத்தின் பணியும் -- உள்ளாட்சித் துறையின் பணியும் விரைவுபடுத்தப்பட்டு, ஆங்காங்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் தேவை வேக வேகமாகத் தீர்க்கப்பட்டு வருகிறது!

தாழ்த்தப்பட்ட மக்களின் காலனிகள் பல ஆண்டுக்காலமாக இருண்டுகிடந்திருந்த நிலையை மாற்றி -- அவர்தம் இருபதாயிரம் காலனிகளில் முக்கால் பங்கிற்கு மேல் ஒளி விளக்கு அமைத்து விட்டோம்!

சமதர்மத் திட்டங்களின் புதுநோக்கோடு நிலச் சீர்திருத்த சட்டங்கள்! ஏற்கனவே இருந்த விதி விதிவிலக்குகள் ரத்து!

ஐந்தாண்டுகளுக்குள் பேருந்துத் தொழில் முழுவதையும் பொதுத் துறையாக மாற்றுகின்ற திட்டம்!

பொதுத் துறையில் தொழிலாளர்களுக்கு முதலீட்டில் இருபத்து நான்கு சதவிகிதம் பங்கு ஒதுக்கப்பெறும்' என்ற முடிவு!

இதுபோன்ற நற்பணிகள், நமது மாநிலத்து மக்களின் மனத்தில் புதியதோர் உணர்ச்சியை உருவாக்கியுள்ளன என்பதில் எள்ளளவு ஐயமுமில்லை!

அந்த உணர்ச்சிப் பெருக்கை நாம் எடுக்கும் விடுதலை வெள்ளி விழாவிலே காண்கின்றோம்.

அறிஞர் அண்ணா கூறியதுபோல், 1947 ஆகஸ்டு 15 -- கணக்குத் தீர்த்த நாள்! ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடுகிற விடுதலை நாள் -- கணக்கும் பார்க்கும் நாள்!

ஆம் -- அந்தக் கணக்கைப் பார்த்து அகமகிழும் காரணத்தால்தான் -- இந்த ஆண்டில் மட்டும் தமிழகத்தில் ஓர் இலட்சம் ஏழை மக்கள் கண் ஒளி பெறப் போகிறார்கள் என்ற கணக்கைப் பார்த்துக் களிப்படையும் காரணத்தால்தான் -- விழாச் சிறப்பை எங்கணும் காண்கிறோம் தமிழகத்தில்!

தில்லி மாநகர் சென்ற தியாகச் செம்மல்களை சென்னை இரயிலடிக்குச் சென்று மாலையிட்டு வழியனுப்பி வைத்தேன்; அவர்கள் கண்களில், 'ஆனந்த பாஷ்யம்' என்பார்களே -- அதனைக் கண்டேன்!

தியாகிகளை மதிக்கும் அரசு இது; அதனால்தான், ஏழாயிரம் தியாகிகட்கு மாதம் ஐம்பது ரூபாய் மானியம் வழங்கி வந்தோம்; இனிமேல் அதனை ரூ. 75 ஆக அளிக்க இருக்கிறோம்!

பாரதிக்கு -- வ. உ. சி.-க்கு -- மற்றும் பல வீரத் தளபதிகட்குச் சிலை எடுத்தோம்.

வள்ளியம்மை பெயராலே நகர் ஒன்றை ஏழு இலட்சம் ரூபாய் செலவில் தில்லையாடியில் அமைத்துள்ளோம்;

வாஞ்சிநாதன் குடும்பத்துக்கு மானியம் -- கட்டபொம்மன் சந்ததிக்கு மானியம் -- நாமக்கல்லார், பெல்லையப்பர் குடும்பத்திற்கு மாதாந்திர உதவித் தொகை -- சங்கரலிங்க நாடார் குடும்பத்திற்கு நிதி உதவி -- இத்தனையும் செய்திட்ட இந்த அரசு, கோவைச் சிறையில் சிதம்பரனார் இழுத்திட்ட செக்குதனை சென்னையிலே கண்காட்சிப் பொருளாக ஆக்குவதற்கும் திட்டம் தீட்டியுள்ளது!

தியாகத்தைப் போற்றுகின்றோம் -- தியாகிகளைத் தெய்வமெனத் தொழுகின்றோம்; அவர்கள் எதற்காகத் தியாக வேள்ளி வளர்த்தனரோ அந்த நோக்கம் பாழ்படாது பணியாற்றுவோம்!

சமதர்மம் -- வெறும் உதட்டு உச்சரிப்பாக இல்லாமல் செயல்படுத்தப்பட வேண்டும்!

கவர்ச்சிகரமான மூழக்கங்கள் எளிது -- அதனை உளத் தூய்மையுடன் நிறைவேற்ற முன்வர வேண்டும்!

முற்போக்குக் கொள்கை வழிநின்று இந்தியா முன்னேற வேண்டும்! ஒருமைப்பாட்டில் அசையாத நம்பிக்கையுள்ள தமிழகம், அந்த முற்போக்கு முகிழ்ப்பதற்கு வழிகாட்டியாகத் திகழ்கின்ற அளவுக்குப் பாமர -- பாட்டாளி மக்கள், பட்டிக்காட்டு மக்கள் வாழ்வை மையமாக வைத்துச் செயலாற்றி வருகிறது!

மேலும் அத்தொண்டு சிறந்திட -- தொல்லைகள் அகற்றிட -- தூய நெஞ்சங்கொண்டோர் அனைவரும் இந்நாளில் உறுதியெடுத்துக் கொள்ள வேண்டுகிறேன்."

--முதலமைச்சர் கலைஞர்

(விடுதலை நாள் வெள்ளி விழாவையொட்டி வானொலியில் ஆற்றிய உரையில்)

சிதம்பரனார் இழுத்த செக்கு

சென்னைக்கு வந்துசேர்ந்தது

சென்னை, ஆக. 17—

கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார் கோவை மத்திய சிறையில் வைக்கப்பட்டிருந்த போது அவர் இழுத்த 'செக்கு' சென்னைக்குக் கொண்டுவரப்பட்டது.

தக்க இடமொன்றில் அது நிரந்தரமாக வைக்கப்படும் வரையில் சிறிது நாட்களுக்குப் பொதுமக்கள் பார்ப்பதற்காக வைக்கப்படலாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அறிவி அச்சகத்தில் (24, [illegible]) [illegible] வெளியிடப்படுகிறது.

விருது பெற வந்தவர் மரணம்

புதுடில்லி, ஆக. 17—

இங்கு தாமிரப் பட்டயம் பெறுவதற்கு மேற்கு வங்கத்திலிருந்து வந்திருந்த விடுதலைப் போராட்டத் தியாகி மௌல்வி அப்துல் லத்தீப் என்பவர் ஆக. 14-ம் நாள் இரவு இங்கு மரணமடைந்தார்; அவருக்கு வயது 92; மனைவியும்--ஒரு மகனும் இரு மகள்களும் இருக்கின்றனர்.

1942-ல், 'இந்தியாவை விட்டு வெளியேறு' என்ற போராட்டத்தில் ஈடுபட்டதற்காக அவருக்கு வெள்ளையர் ஆட்சி 6 மாத சிறைத் தண்டனை அளித்தது.

மேற்கு வங்கத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்த அவர், கடந்த 8-ம் நாள் டெல்லி நிர்வாகம் அளித்த வரவேற்பில் கலந்துகொண்டார்.

மாதம் ரூ. 80 பென்ஷன் தர அவரது பெயர் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது; இனி அத்தொகை அவரது மனைவிக்கு வழங்கப்படும் என்று தெரியவருகிறது.

புரட்சி நடிகருக்கு ஆளுநர் பாராட்டு

தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் நடத்திய விழா

சென்னை, ஆக. 16—

'பாரத்' விருதுபெற்ற புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களுக்குத் தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் சார்பில் இராஜாஜி மண்டபத்தில் சிறப்பான பாராட்டு விழா நடைபெற்றது.

தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத் தலைவரும் உயர் நீதிமன்ற நீதிபதியுமான பி. ஆர். கோகுலகிருஷ்ணன் விழாவிற்குத் தலைமை யகித்தார்.

சங்கச் செயலாளர் எஸ். டி. சுந்தரம் வாழ்த்து இதழ் படித்துக் கொடுத்தார்.

தமிழக ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் சங்கத்தின் சார்பில் புரட்சி நடிகருக்குப் பொன்னாடை போர்த்தி -- சந்தன மாலையை அணிவித்து--நடராஜர் சிலையினைப் பரிசாக வழங்கி -- பாராட்டுரை வழங்கினார்; அவர்தம் உரையில், 'எம். ஜி. ஆர். சிறந்த நடிகர்; நல்லொழுக்கமும் அடக்கமான பண்பும் உடையவர்; தமிழ் மக்கள் இதயங்களில் இடம் பெற்றவர்' என்று குறிப்பிட்டார்.

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களை வாழ்த்தித் தமிழ் நாடு சட்டப் பேரவைத் தலைவர் கே.ஏ. மதியழகன், மேலவைத் துணைத் தலைவர் ம. பொ. சிவஞானம் மற்றும் பல பிரமுகர்கள் பேசினர்.

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். பாராட்டுகளுக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

மரண வாயிலிருந்து...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த 83 பேரும் தூக்கு மேடையிலிருந்து மீளுவார்கள்.

தமிழக அரசு ஏற்கனவே மரண தண்டனைக் கைதிகளின் பட்டியலைத் தயாரித்து, 'தண்டனையை நிறைவேற்ற வேண்டாம்' என்று ஆணை பிறப்பித்திருக்கிறது.

'இவையெல்லாம் அரசியல் சம்பந்தமில்லாத வழக்குகள்' எனச் சொல்லப்படுகிறது.

மக்களவையில் வெளிநடப்பு

புதுடில்லி, ஆக. 17—

பம்பாய் நகராட்சி ஊழியர்கள் போனசு கேட்டு வேலைநிறுத்தம் செய்துவருவது குறித்து நாடாளுமன்ற மக்களவையில் விவாதிக்க ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தை எதிர்க் கட்சியினர் கொண்டுவந்தனர்; அதனை அவைத் தலைவர் அனுமதிக்க மறுத்தார்.

இதனை எதிர்க் கட்சியினர் பலமாக எதிர்த்துக் குரல் எழுப்பினர்; எனவே, 'நிலைமை குறித்துத் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் காடில்கர் அறிக்கை ஒன்று அளிக்கலாம்' என்று அவைத் தலைவர் யோசனை தெரிவித்தார்.

இந்த யோசனையைக் காங்கிரசு உறுப்பினர்கள் எதிர்த்தனர். அவைத் தலைவர் மீண்டும் அமைச்சரிடம் அறிக்கையைக் கோரவே, போனசுப் பிரச்சினையைக் குழு ஆராய்ந்து வருவதால் தாம் எதுவும் இது குறித்துக் கூறுவதற்கில்லை என்று தெரிவித்தார்.

இதைக் காங்கிரசு உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்; எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் கண்டித்து வெளிநடப்புச் செய்தனர்.